## உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது!

# தோகை விரித்தாடினும் வான்கோழி வண்ணமயிலாகாது!

“ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கம்” (RSS) அமைப்பின் தலைவர் மோகன்பகாவத் சமீபத்தில் அமெரிக்காவில் ஏற்பாடு செய்யப்பட்ட அனைத்து மதத்தைச் சார்ந்த வர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்பொழுது, ஏனைய மற்றும் பிற மதங்களையும், அந்த மதங்களை பின்பற்றுபவர்களையும் வெறுப்பதோ விமர்சிப்பதோ இந்துத்துவாக் கோட்பாட்டின் கொள்கையும் அல்ல நோக்கமும் அல்ல. அத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் இந்துக்களும் அல்லர் என்று தன் உரையில் குறிப்பிட்டதன்மூலம், எப்படியாவது பிற மதம் சார்ந்தவர்களை சாந்தப்படுத்துவதற்கும், சமாதானப்படுத்துவதற்கும், சரிப்படுத்து வதற்குமான முயற்சியின் தொடக்கமாக இந்தக் கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

ஆனால் அதே மோகன்பகாவத் இந்தியாவிற்கு திரும்பியபின், அதனையொட்டிய மதச்சார்பற்றக் கருத்துக்களைத் தொடர்ந்து வெளியிட்டு வருவது குறித்து 19.09.26 தேதியிட்ட “இந்து” ஆங்கில நாளிதழ் (Secularism is a “Modern” concept, does not fit India’s tradition, says RSS chief) விரிவான செய்தியினை வெளியிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (18.09.26) அதே மோகன்பகாவத் தன்னுடைய பத்திரிக்கைச் செய்தியில் இளைஞர்களை மையப்படுத்தி அவர்கள் சமீபகாலமாக நடத்திக்காட்டிய போராட்ட நிகழ்வுகளைப்பற்றி குறிப்பிடுகையில், ஓர் எச்சரிக்கையினை வெளிப்படுத்திருக்கிறார். அதாவது தன்முனைப்பால் (Ego) பெரிதும் உந்தப்பட்ட இன்றைய இளைஞர்கள், நாட்டின் எல்லா நடவடிக்கைகளும் தங்களுடைய ஆளுமை யின் கட்டுப்பாட்டிலும் இருக்க வேண்டும் என்றும் தாங்கள் விரும்புகிறபடி தான் நிகழ்வுகளும், நிகழ்ச்சிகளும் அரங்கேற வேண்டும் என்று சிந்திப்பதும், நம்புவதும், எதிர்பார்ப்பதும் ஓர் தவறான மனப்போக்காகும் (Rashtriya Swayamsevak Sangh (RSS) chief Mohan Bhagawat on Friday cautioned young people against getting consumed by ego, saying the belief that everything is under one’s control and should happen according to one’s wishes, is a misconception) என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன்மூலம் சமீபத்தில் இந்திய ஒன்றியத்தின் தலைநகர் டெல்லியில் தன்னெழுச்சியாக நடைபெற்ற இளைஞர்களின் போராட்டம் குறித்து, “ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்” தலைவர் மோகன்பகாவத் தெரிவித்த கருத்துக்கள் இளைஞர்களின் போராட்ட நோக்கங்க ளுக்கும், உணர்வுகளுக்கும் முற்றிலும் மாறுபட்டதாகவே உள்ளது, தெரிகிறது. ஏனெனில் டெல்லியில் இளைஞர்களால் நடத்தப்பட்ட தன்னெழுச்சியான தொய்வில்லா தொடர்போராட்டம்தான், இருபால் மாணவர்களின் (NEET) தகுதித்தேர்வு தொடர்பான அவலங்கள் குறித்தும், கேள்வித்தாள்கள் முன்கூட்டியே வெளியானது பற்றியும் ஒன்றிய அரசின் திறமையின்மையை உலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியது.

இவற்றிற்கெல்லாம் பொறுப்பேற்க வேண்டிய முன்னாள் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவரது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும் என்றும், பாதிக்கப்பட்ட இருபால் மாணவர்களுக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் நியாயமான தங்களின் கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி, நீதி கேட்டு இளைஞர்கள் மேற்கொண்ட அந்தத் தீரமிகு போராட்டம் தன்னிச்சையான இயற்கையான போராட்டத்தை இளைஞர்க ளின் முன்னெடுப்பான (Ego) அவசியமற்ற போராட்டம் என்றும் தேவையற்ற சிந்தனையின் முன்னெடுப் பென்றும் மோகன்பகாவத் சொல்வது போல் எப்படி கருதமுடியும்? எப்படி நினைக்க முடியும்?

எனவே, மோகன்பகாவத் இன்றைய இளைஞர்களின், யுவதிகளின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி, டெல்லி “ஜந்தர் மந்தரில்” நடைபெற்ற போராட்டத்தை இன்றைய இளைஞர்களின் தவறான சிந்தனையின் விளைவு (Misconception) என்று அவர் சொல்லியிருப்பது சரியான பார்வையல்ல! இருபால் மாணவர்க ளின் நியாயமான கோரிக்கைகளுக்காக டெல்லி “ஜந்தர் மந்தரில்” அவர்கள் முன்னின்று போராட்டம் நடத்தாமல் போயிருந்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் கோரிக்கை நிறைவேறியிருக்குமா? நீதி கிடைத்திருக்குமா? அன்றைய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் இந்தத் தவறுகளுக்குப் பொறுப்பேற்று ராஜினாமா செய்திருப்பாரா? என்பதையும் பொதுமக்களின் தீர்ப்பிற்கே விட்டுவிடுகிறேன்.

மோகன்பகாவத் மத்தியப் பிரதேசம் மாநிலம் உஜ்ஜைனி நகரிலுள்ள “யுவதர்மா” சபையில் மோகன்பகாவத் உரையாற்றுகின்ற பொழுது, மதச்சார்பற்றக் கோட்பாட்டிற்கு (Secularism) ஒரு புதிய விளக்கத்தை (Interpretation) தந்துள்ளார். இந்தக் கோட்பாடு அவரது புதிய நிகழ்கால கண்டுபிடிப்பிற்கு பதியம் போடுவதாக உள்ளது. இந்திய ஒன்றியத்தின் மதம்சார்ந்த சமயம் குறித்த உறவுகள், சமூகம் அரசுப் பற்றிய நீண்டகால குறிப்புகள் ஆகியவற்றின் அடிப்படை வழக்கங்களுக்கு மாறானது என்பதோடு முரண்பட்டதுமாகும். எனவே மதச்சார்பற்ற கோட்பாடு இந்திய நாட்டிற்கு பொருந்தாது என்று (Regarding the definition of secularism, the RSS chief termed it a modern concept that does not fit India’s traditional understanding of the relationship between religion, society and the State) தெரிவித்திருக்கிறார்.

மேலும், இந்தியா தொன்றுதொட்டு மற்ற மதங்களை ஏற்றத்தாழ்வாக கருதாமல் சமமாக கருதுகின்ற வழிமுறையை பின்பற்றுகிறோம் என்று (He said India’s approach has traditionally been based on non discrimination and equal respect for different religious paths. Mr. Bhagawat also urged young people to respect their own chosen form of worship while showing equal respect for the practices of others) குறிப்பிடுகிறார்.

**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்



மதச்சார்பற்றக் கோட்பாடு (Secularism) என்பது மேற்கத்திய நாடுகளின் அரசியல் கோட்பாடாகும். அங்கு முடிமன்னர்கள் ஆட்சிஅதிகாரத்தையும், மதகுருமார்கள் மதமடாலயங்களை யும் பிரித்து நிர்வகிக்கும் நிலையில் அங்கு மதச்சார்பற்றக் கோட்பாடு கொள்கையாக வடிவம் பெற்றது தானாக வந்த ஆட்சி நடைமுறையாகும். ஆனால், இங்கு இந்தியாவை ஆட்சிசெய்கின்ற பொழுதெல்லாம் “ராஜதர்மம்” பின்பற்றப்படுகிறது என்று (Whenever India was governed by Indians, the country followed the Path of Dharma) குறிப்பிடுகிறார்.

இவ்வாறு ராஷ்டிரிய சுயம்சேவக்சங்கின் தலைவர் மோகன்பகாவத் கூறியிருப்பது போல, இந்தியாவை இந்தியர்கள் ஆட்சி செய்த பொழுதுதான், குஜராத்தில் ஏற்பட்ட மதக் கலவரத்தால் பலநூறு உயிர்கள் காவு கொடுக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் மதச்சிறுபான்மையினர் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டு பாதிக்கப்படுகிறார்கள். இவ்வாறு சிறுபான்மை மக்களின் உரிமைகள் சட்டத்தின்மூலம் பறிக்கப்படுகிறது என்பதற்கு ஒன்றல்ல இரண்டல்ல பல்வேறு நிகழ்வுகளை எடுத்துக்காட்ட முடியும்.

இந்திய ஒன்றியத்தில் வாழும் சிறுபான்மை யின மக்கள் குடியுரிமை பெறுவதிலும், பெரும்பான்மை மக்களுக்கு சரிநிகர் சமமான வாழ்க்கை சமத்துவத்தை அடைந்து கொள்வதி லும் எத்தகையப் போராட்டங்களெல்லாம் நடந்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் “ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தின் ”தலைவர் மோகன்பகாவத் அறியாத செய்திகளல்ல. குஜராத்தில் நடந்த கொடூரப்படு கொலையைக் கண்டு வேதனையடைந்த அன்றைய பிரதமர் மறைந்த வாஜ்பாய் அவர்கள்கூட “ராஜதர்மம்” காப்பாற்றப்பட வேண்டும் என்று எச்சரித்தார் என்கின்ற நிகழ்வையும் மோகன்பகாவத் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

விடுதலைப்பெற்ற இந்திய ஒன்றியத்தில் இனியும் மதத்தின் பெயரால் மனிதர்கள் கொலை செய்யப்பட்டு மதக் கலவரங்கள் நடக்கக்கூடாது என்ற நல்லெண்ணத்திலும் இருவேறு சமூகங்களுக்கிடையே எழும் இனப்பகைக்கு இனியும் உருவாகக்கூடாது என்றும் மதச்சார்பின்மை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையில்தான் இந்திய அரசியல் சட்டத்தை வடிவமைத்த பாபாசாகிப் டாக்டர்.அம்பேத்கார் தலைமையிலான அரசியல் அறிஞர்கள் இந்திய அரசியல் சட்டத்தில் மதச்சார்பற்றக் கோட்பாட்டை ஆட்சி சக்கரத்தில் அச்சாணி ஆக்கினார்கள்.

இந்திய அரசியல் சட்டத்திலுள்ள மதச்சார்பற்றக் கோட்பாட்டின் அடிப்படையில் உருவாகும் அரசின் மூலம் சிறுபான்மை மக்களுக்கான பாதுகாப்பு அரசியல் சட்டவடிவம் பெற்றுள்ளது. எனவே, மதச்சார்பற்றக் கோட்பாட்டை அரசியல் சட்டத்திலிருந்து அப்புறப்படுத்துகிற முயற்சியினை ராஷ்டிரிய சுயம் சேவக் சங் அமைப்பும், அதனுடைய அரசியல் கிளையான பாரதிய ஜனதா கட்சியும் தொடர்ந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இவர்களது இந்தத் திரைமறைவு முயற்சிகள் உலகிற்கும் மனித சமுதாயத்திற்கு தெரிந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தின் தலைவர் மோகன்ப காவத் அமெரிக்காவிலும், இந்தியாவிலும் உரையாற்றுகின்ற பொழுது மதச்சார்பற்றக் கோட்பாடு மேற்கத்திய நாடுகளின் கொள்கை எனவும், அந்தக் கோட்பாடு “ராஜதர்மப்படி” ஆட்சி நடத்தும் இந்தியாவிற்கு பொருந்தாது என்றும் தொடர்ந்து வலியுறுத்திவருகிறார்.

மேலும், இந்துத்துவாக் கோட்பாட்டினால் மற்ற மதத்தவர்கள் வெறுப்படைந்து விடக்கூடாது என்பதற்காகவும், இந்திய ஒன்றியத்தில் ஆங்காங்கு சிறுபான்மையினர்கள் நடத்துகின்ற போராட்டங்களை சரிகட்டுவதற்காகவும், இத்தகைய முரண்பட்ட கருத்துக்களைத் பச்சோந்தித்தனமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக தெரிவித்து வருகிறார். மோகன்பகாவத்தின் இத்தகைய சமீபகால உரைகள், கருத்துக்கள் மதச் சிறுபான்மை மக்களை சாந்தப்படுத்துவதற்காக மட்டுமேயல்லாமல், அவருடைய உண்மை யான சிந்தனையும், நோக்கமும் இந்துத்து வாக் கோட்பாட்டின் அடிப்படை யிலான இந்துராஷ்டிரம் மட்டும் என்பதை அகிலம் அறியும்!

ஆம்! உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது! என்பதைப் போலவும் என்னதான் தோகை விரித்தாடினாலும் வான்கோழி வண்ணமையிலாகாது என்பதும் போல, ராஷ்டிரிய சுயம்சேவக் சங்கத்தின் தலைவர் மோகன் பகாவத்தின் எண்ணமும் செயலும் ஒருபோதும் நிறைவேறாது என்பதை தெளிவாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

## கல்லறை போன்ற எதுவும் அருகில் இருக்கக் கூடாது!

# புதிய தலைமைச் செயலகம் கட்ட ‘வாஸ்து’!

## முதல்வர் அலுவலகக் கட்டுப்பாட்டினால் அதிகாரிகள் திணறல்!

சென்னை, செப். 24 -

சென்னை, பட்டினப் பாக்கத்தில் உள்ள, முதல் வர் விஜய் வீடு அருகே, புதிய தலைமைச் செயலகம் கட்ட, கடந்த ஆகஸ்ட் மாதம் முடிவெடுக்கப்பட் டது. அதற்கான பூர்வாங்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு, சட்டசபையில் முதல்வர் விஜய் அறிவித்தார்.

அதன்படி, 1,200 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும் என அர சாணை வெளியிடப்பட் டது. ஆனால், பட்டினப் பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்ட எதிர்ப்பு தெரிவித்து, மீனவர்கள் போராடி வருகின்றனர்.

த.வெ.க., அரசுக்கு ஆதரவு அளித்த கம்யூனிஸ்ட் கட்சிகளும், எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இதனால், தலைமைச் செயலகம் கட்டுவதற்கான அடுத் தக் கட்ட பணிகளை, மேற்கொள்ள முடியா மல், பொதுப்பணித்துறை திணறி வருகிறது.

இதுகுறித்து, பொதுப் பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:

தலைமைச் செயலகம் கட்ட, சென்னைக்குள் இடம் பார்க்க வேண்டும் என, முதல்வர் அலுவலகம் உத்தரவிட்டது. அதன்படி, கிண்டி ரேஸ் கோர்ஸ், கிண்டி நெடுஞ்சாலைத்துறை வளாகம், சிந்தாதரி பேட்டை பல்லவன் இல் லம், தீவுத்திடல், கவர்னர் மாளிகையை சுற்றியுள்ள இடம், சேப்பாக்கம் எழிலகம் வளாகம் என பல இடங்கள் ஆய்வு செய்யப் பட்டன. ஆனால், முதல்வரின் விருப்பப்படி, பட்டினப் பாக்கம் இறுதி செய்யப் பட்டது. தற்போது எதிர்ப்பு அதிகமாக வருவதால், அந்த பணிகள் நிறுத்தப்பட்டுள் ளன.

அதேபோல், ‘எதற்கும் மாற்று இடத்தை பார்த்து வையுங்கள்’ என முதல்வர் அலுவலகத்தில் இருந்து அறிவுறுத்தல் வந்தது. அதன்படி, ஏற்கனவே பரிந்துரையில் இருந்த, பல்லவன் இல்லம் இடம் மீண்டும் பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால், ‘அதன் அருகே கல்லறை தோட் டம் இருப்பதால், வாஸ்து படி கெட்ட அதிர்வு இருக் கும். அது சரிவராது’ என முதல்வர் அலுவலகம் நினைக்கிறது.

சேப்பாக்கம் எழிலகத்தின் பின்னால் கட்டலாம் என பரிந்துரைத்த போது, கிழக்கு திசை நோக்கி கட்டுமானம் கட்ட வழியில்லை என்கின்றனர்.

முதல்வருக்கு சாதகமாக அமைய, வாஸ்துபடி கடல் அருகே இருக்க வேண்டும் என்பதால், தீவுத்திடல் மட்டும் பரிந்துரையில் உள்ளது. தலைமைச் செயலகம் போன்ற பெரிய அளவில் கட்டுமானம் கட்டும் போது, அது வசதியாக இருக்கிறதா என்றுதான் துறை பார்க்கும்.

ஆனால், வாஸ்து, திசை, கடல் அருகே இருக்க வேண்டும், கல்லறை போன்ற எதுவும் இருக்கக் கூடாது என, பல கட்டுப்பாடுகளை, முதல்வர் அலுவலகம் விதித்துள்ளது.

இதனால், அவர்க ளின் தேவையை பூர்த்தி செய்ய, இடம் கிடைக்காமல், அரசு நிர்வாகம் திண்டாடி வருகிறது.

இவ்வாறு கூறினர் என்று ‘தினமலர்’ நாளேடு 22.09.2026 அன்று வெளியிட்டுள்ள செய்தியில் கூறப்பட்டுள்ளது.



தர்மபுரியில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளை கண்டித்து தர்மபுரி மாவட்ட தொ.மு.ச. பேரவை கவுன்சில் மற்றும் இணைப்பு தொழிற்சங்கங்கள் சார்பில் மக்கள் விரோத,தொழிலாளர் விரோத மற்றும் ஜனநாயக விரோத ஒன்றிய,மாநில அரசுகளை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் அகில இந்திய தொ.மு.ச. பேரவை பொருளாளர் கோ.சி. வள்ளுவன் தலைமையில் நடைபெற்றது.ஆர்ப்பாட்டத்தில் சண்முகராஜ்,அன்புமணி, ஜெய்சங்கர்,பரமசிவம், LPF.சக்திவேல் மற்றும் துணை செயலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

---

## கரூர் - கிருஷ்ணராயபுரத்தில்

# ‘ரீல்ஸ்’ ஆட்சி எம்.எல்.ஏ.வை பொதுமக்கள் முற்றுகை!

*கரூர்.செப்.24-*

*ரீல்ஸ் ஆட்சி நடத்தி வரும் தவெக. கிருஷ்ணராயபுரம் தொகுதி எம்.எல்.ஏ.வை பொதுமக்கள் முற்று கையிட்டனர்.*

*கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தொகுதிக்கு உட்பட்ட சேங்கல் ஊராட்சியில் மின்வெட்டு, குடிநீர் தட்டுப்பாட்டை கண்டித்து பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். போலீசார் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தனர்.*

*போராட்டம் முடிந்து பொதுமக்கள் கலைந்து செல்லத் துவங்கிய நிலையில் சமரசம் பேச த.வெ.க கிருஷ்ணராயபுரம் தொகுதி எம்.எல்.ஏ. சத்யா வந்தார்.*

*அவரை பொதுமக்கள் சுற்றி வளைத்து வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.*

*கரூர் மாவட்டத்தில் அடிக்கடி அறிவிக்கப்படாத மின்தடை ஏற்படுகிறது. உரிய நடவடிக்கை எடுக்காமல் மின்வெட்டு இல்லை என்று பொய் பிரச்சாரம் செய்யப்படுகிறது.*

*விவசாயம் சிறு தொழில் கடுமையாக பாதிக்கப் பட்டுள்ளது. கடந்த ஆட்சியில் மின்சார வினியோகம் எந்த பிரச்சினையும் இல்லாமல் இருந்தது. மேலும் விவசாய கடன் தள்ளுபடி பிரச்சினையில் தொடர்ந்து இந்த அரசு குழப்பி வருகிறது.*

*விவசாய கடன் தள்ளுபடி யாரும் கேட்கவில்லை. உங்கள் கட்சி தலைவர் தான் ஆட்சிக்கு வந்தால் அனைத்து விவசாய கடன்களையும் தள்ளுபடி செய்வோம் என்றார். ஆனால் சொன்னபடி செய்யாமல் பல்வேறு குளறுபடி அறிவிப்புகளை வெளியிட்டு வருகின்றனர். விவசாய கடன் தள்ளுபடி செய்ய கூறுங்கள் என சரமாரியாக கேள்வி கேட்டனர்.*

*பின்னர் அங்கிருந்து எம்.எல்.ஏ. காரில் ஏறி சென்று விட்டார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**டி.கே. பழனிச்சாமி**
**செப்டம்பர் 24 (2000)**



**திருவெற்றியூர் நகரக் கழகச் செயலாளராகவும், நகராட்சி மன்றத் தலைவராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அறப்போராட்டங்கள் அனைத்திலும் பங்கேற்றவர்.**

**‘கழகத்தை உயிர்மூச்சாகக் கொண்டு ஓடியாடி உழைத்த உடன்பிறப்பு’ என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**